Read India
An imprint of Pratham Books

# என் உடல் பேசுவதைக் கேளுங்கள்

எழுதியவர்
நோனி
வரைபடம்
ஏஞ்சி & உபேஷ்



Original(*English*) Listen to My Body by Noni
© Pratham Books, 2008

Second Tamil Edition: 2010

Illustrations: Angie & Upesh
Tamil Translation: S. Jayaraman

ISBN 978-81-8263-966-9

Registered Office:
PRATHAM BOOKS
No.633/634, 4th "C" Main,
6th 'B' Cross, OMBR Layout, Banaswadi,
Bangalore- 560 043.
Phone: +91 80 25420925

Regional Office:
New Delhi  +91 11 41042483

Typsetting and Layout by:
The Other Design Studio

Printed by:
xxxxxxxxxxxxx

Published by:
Pratham Books
www.prathambooks.org

Some rights reserved. This book is CC-BY-3.0 licensed.
Full terms of use and attribution available at:
http://www.prathambooks.org/cc

# என் உடல் பேசுவதைக் கேளுங்கள்



எழுதியவர்: நோனி

வரைபடம்: ஏஞ்ஜி & உபேஷ்

தமிழாக்கம்: எஸ். ஜெயராமன்

நான் இன்று பள்ளிக்குச் செல்லவில்லை.

இன்று விடுமுறை நாள்.



நான் இன்று ‘டீவி’ யும் பார்க்கப் போவதில்லை.





எப்படியும் மின்சாரமும்
இல்லை.

நான் என்ன செய்யப் போகிறேன்?




இன்று,
நான் என் உடல்
பேசுவதைக் கேட்கப்
போகிறேன்.



முதலில் நான் அமைதியாக இருக்க வேண்டும். மிக அமைதியாக.




அப்பொழுதுதான் என் உடல் பேசுவதைக் கேட்க முடியும்.




ஆம்,
இப்பொழுது
என் மூச்சு
சத்தம் கேட்கிறது.

உள்ளே.. .. வெளியே..

..





உள்ளே.. .. வெளியே..

என் மூச்சு சத்தத்தை என்னால் அதிகமாக்க முடியும்....



ஸ் ஸ் ஸ் ஸ்.. ..

சத்தத்தை
குறைக்கவும்
முடியும்
ம் ம் ம் ம்.. ..

இப்பொழுது...
என் இதயம் துடிப்பது எனக்கு கேட்கிறது.



டு டும்

டு டும்

டு டும்ம்

என்னால் என் இதயத்துடிப்பை வேகமாக்க அல்லது சத்தமாக்க முடியுமா?



முடியும்.. ..குதிப்பதன் மூலம்

மேலும் கீழும்

இருபது தடவை.

பாருங்கள் இப்போது! என் இதயம் வேகமாக துடிக்கிறது !



என் மணிக்கட்டில் விரலை வைத்தால்
என்னுடைய நாடித்துடிப்பு எனக்கு கேட்கிறது.



நான் சிரிப்பது எனக்கு கேட்கிறது



ஹ ஹ

ஹ ஹ

ஹா ஹ

ஹா



அழுவதும்தான்

பூ.. உள.. ..உள..





கைதட்டுவதைக்கூட

டப்

டப்பா

டப்

டப்பா



இதற்கெல்லாம் மேலாக
என் வயிற்றின் இரைச்சலை
நான் கேட்கிறேன்.




குடு

குடு

குடு

...

அது சொல்கிறது



உணவு
கொடு
உணவு
கொடு

என் தாயார், சமையலறையில் ஜிலேபி பொறிப்பது என் மூக்குக்கு கேட்கிறது.





என் உடல் பேசுவதை
கவனிப்பதே குஷிதான்.



இப்பொழுது என்
தாடைகள் அசை
போடுவதை
கேட்கப்போகிறேன்.

என் தாயார் செய்த சுவையான ஜிலேபிகளை
என் வயிறு ஜீரணம் செய்வதையும்தான் !



உடல் பாகங்களுக்குச் சரியாக ஒலிகளைப் பொருத்தவும்.



கைகள்

விசில்



உதடுகள்

தொம் தொம்



பாதங்கள்

டப் டப்



என் பெயர் கோபால் ஜி ஸ்ரீவத்ஸவா. நான் ஐந்தாம் வகுப்பு படிக்கிறேன். அமிதாப்பச்சன், கஜோல் நடித்த படங்கள் எதையும் பார்க்கத் தவற மாட்டேன். பாட்மிண்டன் ஆடுவதும், பாங்கரா நடனமும் எனக்கு பிடிக்கும்.
நீங்கள் இந்த புத்தகத்தை வாங்கியதற்கு நன்றி. நானும் என் நண்பர்களும் எங்கள் நூலகத்தில் மேலும் பல புத்தகங்களைப் படிக்க இந்த உங்கள் செயல் உதவும்.

நோனி பெங்களூரில் வசிக்கும் எழுத்தாளர் ஒருவரின் புனைப்பெயர். அவர் கல்வித் தொடர்பான துறையில் பணி புரிகிறார்.

ஏஞ்ஜி ஒரு கிராஃபிக் வடிவமைப்பாளர். நேரம் கிடைத்த பொழுது செராமிக் பொருட்களிலும் தன் கலைவண்ணத்தை காட்டுபவர். உபேஷ் ஒரு அனிமேட்டர். ஓவியமயமான நாவல்களை சேகரிப்பதிலும், மாறுபட்ட திரைப் படங்களை பார்ப்பதிலும் தன் ஓய்வு நேரத்தை செலவழிப்பார். ஏஞ்ஜியுடன் சேர்ந்து "தி அதர் டிஸைன் ஸ்டுடியோ" அமைப்பை உருவாக்கினார்கள்.

நம் ஒவ்வொருவருக்கும் அற்புதமான உடல் உள்ளது.
ஆனால் அது என்ன சொல்கிறதென்று நாம்
கேட்கிறோமா ?

நாங்கள் வெளியிட்டுள்ள சுவையான புத்தகங்களைப்பற்றி
மேலும் விவரங்களுக்கு, www.prathambooks.org இணைய தளத்தைப் பார்க்கவும்.

எங்கள் புத்தகங்கள் ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, பெங்காலி, பஞ்சாபி, உருது
மற்றும் ஒரியா மொழிகளில் கிடைக்கும்.

PRATHAM BOOKS

பிரதம் புக்ஸ்: லாப நோக்கமின்றி, எல்லோரும் வாங்கக்கூடிய விலையில், குழந்தைகளுக்கான
புத்தகங்களை இந்திய மொழிகளில், மிக உன்னதமான தரத்தில் வெளியிடுகிறார்கள்.

ISBN 978-81-8263-966-9

Age Group: 3-6 years
En Udal Pesuvadai Kelungal (Tamil)
MRP: Rs. 15.00